## தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

### மேற்சான்றிதழ் நிலை -1 (Higher Grade – HG10)

### இணையவழித் தேர்வு -2

### மே - 2017

நேரம் : 30 நிமிடங்கள் மதிப்பெண்கள் : 50

**I . கீழ்காண்பனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துத் தருக.**

**Choose the right answer for the following questions.** [15 x 1 = 15]

எடுத்துக்காட்டு / **Example :**

ஆண்டாள் இயற்றிய நூல்

☐ (1) திருப்பள்ளி எழுச்சி ☐ (2) திருமொழி

☑ (3) திருப்பாவை ☐ (4) திருவருட்பா

1. அபிராமி அந்தாதியின் ஆசிரியர் பெயர்

☐ (1) காரைக்கால் அம்மையார் ☐ (2) செயங்கொண்டான்

☐ (3) ஒட்டக்கூத்தர் ☐ (4) அபிராமிப்பட்டர்

2. தனது வாழ்க்கை அனுபவத்தைப் பாட்டாக வடித்தவர்

☐ (1) கண்ணதாசன் ☐ (2) பாரதிதாசன்

☐ (3) கல்யாணசுந்தரம் ☐ (4) தமிழ்ஒளி

3. தலைவி வீட்டில் வெயிலில் காய வைத்த உணவுப்பொருள்

☐ (1) நெல் ☐ (2) சோளம்

☐ (3) எள் ☐ (4) கம்பு

4. கையில் வைத்துக்கொண்டு காமாட்சி அம்மன் காட்சி தருகின்ற கருவி

- (1) கரும்பு
- (2) வில்
- (3) அம்பு
- (4) சூலாயுதம்

5. கேள்விக்கு ஏற்ற தகவலைச் சொல்வது

- (1) செய்தி
- (2) விடை
- (3) பகுதி
- (4) பொருள்

6. அமருதல் என்பதன் பொருள்

- (1) படித்தல்
- (2) நோய் இல்லாமை
- (3) நல்ல ஊழ்
- (4) இருத்தல்

7. வினைச்சொல்லின் படர்க்கை அஃறிணை பன்மை இவ்வாறு முடியும்

- (1) ஓம்
- (2) ஆய்
- (3) ஈர்
- (4) து

8. இரண்டு சொற்களைச் சேர்த்து எழுதும் போது எவ்வித மாற்றமும் இல்லாமல் சேர்வது

- (1) விகாரப் புணர்ச்சி
- (2) இயல்பு புணர்ச்சி
- (3) வேற்றுமைப் புணர்ச்சி
- (4) இதில் எதுவுமில்லை

9. போல, போன்று என்பன

- (1) உவம உருபுகள்
- (2) சொல்லணி
- (3) உண்மைப் பொருள்கள்
- (4) பொதுப்பண்புகள்

10. விட்டுணுக் காஞ்சி என்று போற்றப்பெறுவது

(1) காமாட்சி அம்மன் கோயில்
(2) குமரக்கோட்டம்
(3) வரதராசப் பெருமாள் கோயில்
(4) திருப்பருத்திக் குன்றம்

11. சர்.சி.வி.இராமன் இயற்கை எய்திய இடம்

(1) சென்னை
(2) பெங்களூர்
(3) சிங்கப்பூர்
(4) இங்கிலாந்து

12. கட்டடப்பெற்றவற்றை அழித்தல் என்பது

(1) அமைத்தல்
(2) இடித்தல்
(3) அமருதல்
(4) நன்றி கூறுதல்

13. எச்சத்தின் வகைகள்

(1) நான்கு
(2) ஆறு
(3) இரண்டு
(4) எட்டு

14. பல்+பொடி=பற்பொடி இதில் உள்ள விகாரம்

(1) தோன்றல்
(2) கெடுதல்
(3) திரிதல்
(4) இயல்பு

15. அவர் பறவைபோல பறக்கிறார் என்பது

(1) உண்மைப் பொருள்
(2) உவமை அணி
(3) பொதுப்பண்பு
(4) இல்பொருள் உவமையணி

**II.** சரியா/ தவறா எனக் குறிப்பிடுக.

**Mention whether right or wrong.** **[15 x 1 = 15]**

எடுத்துக்காட்டு / **Example :**

திருமாலுக்குக் கண்ணன், கிருட்டிணன், மாயோன் போன்ற பல பெயர்கள் உள்ளன.

☑ சரி ☐ தவறு

1. முத்தொள்ளாயிரம் என்ற நூலை எழுதியவர் காரைக்காலம்மையார் ஆவார்.

☐ சரி ☐ தவறு

2. 'மக்கள் கவிஞன்' என்று பட்டுக்கோட்டையார் அழைக்கப் பெறுகிறார்.

☐ சரி ☐ தவறு

3. வீட்டின் முன் பகுதியை நடைவீடு என்பர்.

☐ சரி ☐ தவறு

4. காஞ்சிபுரத்தில் எங்குத் திரும்பினாலும் கோயில்கள் உள்ளன.

☐ சரி ☐ தவறு

5. 1970ஆம் ஆண்டு பெங்களூரில் இராமன் காலமானார்.

☐ சரி ☐ தவறு

6. தமிழுக்காகக் கட்டப்பெற்ற மண்டபம் பதினாறுகால் மண்டபம்.

☐ சரி ☐ தவறு

7. வினைச்சொல் காலம் காட்டும்.

☐ சரி ☐ தவறு

8. எழுத்துகள் சேர்ந்து நின்று பொருள் தருவது சொல்.

☐ சரி ☐ தவறு

9. அணி என்பது மூவகை இலக்கணம்.

☐ சரி ☐ தவறு

10. கைலாசநாதர் கோயில் சுவர்களில் அழகான உருவங்கள் கல்லில் செதுக்கப் பெற்றுள்ளன.

☐ சரி ☐ தவறு

11. அறிவியல் கண்டுபிடிப்புகள் மக்கள் வாழ்வில் பெரிய மாற்றங்களைத் தந்துள்ளன.

☐ சரி ☐ தவறு

12. கரிகாலன் கட்டித் தந்த பதினாறுகால் மண்டபமே தமிழ் மண்டபம் ஆகும்.

☐ சரி ☐ தவறு

13. இளங்கோ ஓடுவதைப் பிறர் கூறினால் அது படர்க்கையாகும்.

☐ சரி ☐ தவறு

14. இரு சொற்களின் சேர்க்கையின்போது ஓர் எழுத்து புதிதாகப் பிறந்தால் அது கெடுதல் விகாரப் புணர்ச்சி ஆகும்.

☐ சரி ☐ தவறு

15. செய்யுள் பாடுவதற்கான இலக்கணம் சொல் இலக்கணம்.

☐ சரி ☐ தவறு

**III.** சரியான விடைகளுடன் பொருத்துக.

**Match the following with right answers.** **[5 x 4 = 20]**

எடுத்துக்காட்டு / **Example :**

| | | | | |
|---|---|---|---|---|
| | இராசராசன் | - | கிரேக்கம் | [இராசராசேசுவரம்] |
| | அனுராதபுரம் | - | இங்கிலாந்து | [இலங்கை] |
| | சேக்ஸ்பியர் | - | இலங்கை | [இங்கிலாந்து] |
| | ஹோமர் | - | இராசராசேசுவரம் | [கிரேக்கம்] |
| 1. | உவந்தாள் | - | கொடுத்து | [ ] |
| | வளர்க | - | கொடுத்தீர் | [ ] |
| | இட்டீர் | - | உட்கார்ந்து | [ ] |
| | நல்கி | - | மகிழ்ந்தாள் | [ ] |
| 2. | பதினொன்று | - | fourteen | [ ] |
| | பன்னிரண்டு | - | eleven | [ ] |
| | பதின்மூன்று | - | twelve | [ ] |
| | பதினான்கு | - | thirteen | [ ] |
| 3. | அசை | - | அதிகமாக | [ ] |
| | புகட்ட | - | இட்டு | [ ] |
| | கிடத்தி | - | ஊட்ட | [ ] |
| | மிஞ்ச | - | பலகை | [ ] |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல் | - | ஓடி + விழுந்தான் | [ ] |
| | பெயர்ச்சொல்லோடு வினைச்சொல் | - | வந்தான் + இளங்கோ | [ ] |
| | வினைச்சொல்லோடு பெயர்ச்சொல் | - | இளங்கோ + பிடித்தான் | [ ] |
| | வினைச்சொல்லொடு வினைச்சொல் | - | இளங்கோ + புத்தகம் | [ ] |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | ஒப்பாகச் சொல்லப்படும் பொருள் | - | நட்பு | [ ] |
| | உண்மைப் பொருள் | - | படிக்கப்படிக்க இனிமை ; பழகப்பழக இனிமை | [ ] |
| | பொதுப் பண்பு | - | போலும் | [ ] |
| | உவம உருபு | - | புத்தகம் | [ ] |